



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 217 30.1.2026 FRIDAY THAI : 16 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 217 30.1.2026 வெள்ளிக்கிழமை தை : 16 விலை : ரூ.5/–


## ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்க

# “எந்த வாய்ப்பும் இல்லை!”

## இபிஎஸ் திட்டவட்டம்



சேலம்: ஜன,30-

“அதிமுகவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, ‘நான் பலமுறை சொல்லிவிட்டேன். அவர் 4 வருடமாக கட்சியில் இணைய வேண்டும் என கேட்டு வருகிறார். அதிமுகவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை. 2500 பொதுக்குழு உறுப்பினர்கள் சேர்ந்த எடுத்த முடிவின்படி, ஓபிஎஸ் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் கட்சிக்கு இழைத்த துரோகம் காரணமாக பொதுக்குழு உறுப்பினர்கள் எடுத்த முடிவு இது.

2026 தேர்தல் முடிவில் அதிமுகதான் ஆட்சியமைக்கும். தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. கூட்டணி இறுதி செய்யப்பட்டவுடன் உங்களிடம் தெரிவிப்போம். சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கூட்டணி இறுதி வடிவம் பெற்றவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தையை தொடங்குவோம்” என்று கூறினார்.

முன்னதாக இன்று தேனியில் பேசிய ஓபிஎஸ், “டிடிவி தினகரன் மற்றும் எனது அருமை அண்ணன் எடப்பாடி பழனிசாமி அதிமுக வெற்றி பெற வேண்டும் என கூறுகிறார்கள். அதைத்தான் நானும் கூறுகிறேன். டிடிவி தினகரன் நினைத்தால் நாங்கள் இணைய வழிவகை செய்ய வேண்டும்.

இரண்டாவது தர்மயுத்தம் மனோஜ் பாண்டியன் மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரால்தான் ஏற்பட்டது. தேர்தலில் போட்டி யிடுவதற்காக இந்த இயக்கம் துவங்கவில்லை. கட்சியை மீட்பதற்காகவே துவக்கப்பட்டது. அதிமுகவில் இணைய நாங்கள் தயார். டிடிவி தினகரனும், எடப்பாடி பழனிசாமியும் தயாரா?” எனத் தெரிவித்திருந்தார்.

அதிமுகவில் இணைய ஓபிஎஸ் மீண்டும் இன்று விருப்பம் தெரிவித்த நிலையில், இபிஎஸ் அதனை உடனடியாக மறுத்துள்ளார். எனவே, இனி ஓபிஎஸ் அடுத்தகட்டமாக என்ன முடிவு எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



## சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசிக்கு விருது மற்றும் பாராட்டு சான்றிதழை மாவட்ட ஆட்சியர்வழங்கினார்

### திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொது சுகாதாரம், குடிதண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி, வரிவசூலில் 100 சதவீதம் சாதனை

சின்னாளபட்டி, ஜன29

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி அவர்களுக்கு குடியரசு தினவிழாவில் சிறந்த செயல்அலுவலருக்கான விருது மற்றும் பாராட்டு சான்றிதழை மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் வழங்கினார். திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொது சுகாதாரம், குடிதண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி, வரிவசூலில் 100 சதவீதம் சாதனை செய்ததற்காக விருது வழங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிபவர் இளவரசி இவர் 2000ம் வருடம் செயல் அலுவலராக திருநெல்வேலியில் தனது பணியை தொடங்கி தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல்குடி, ஆர்.எஸ்.மங்கலம், தொண்டி, முதுகுளத்தூர், கமுதி, மண்டபம் ஆகிய பேரூராட்சிகளில் செயல் அலுவலராக பணிபுரிந்து 9 முறை மாவட்ட ஆட்சியரிடம் விருது பெற்றுள்ளார். தற்போது சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார். திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுசுகாதாரம், பாதுகாப்பான குடிதண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி, வரிவசூலில் 100 சதவீதம் சாதனை படைத்ததற்காக செயல் அலுவலர் இளவரசி அவர்களுக்கு ஜனவரி 26ம் தேதி மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 77வது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் செயல் அலுவலர் இளவரசி அவர்களுக்கு சிறந்த செயல் அலுவலர்களுக்கான விருது மற்றும் பாராட்டு சான்று வழங்கி வாழ்;த்தினார். நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.ச.வினோதினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் வி.திருமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செல்வி.ர.கீர்த்தனாமணி ஆகியோர் உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். சிறந்த செயல் அலுவலருக்கான விருதினை பெற்ற செயல்அலுவலர் இளவரசி அவர்களை பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, மற்றும் செயல் அலுவலர்கள், வார்டு உறுப்பினர்கள் உட்பட பலரும் பாராட்டி வாழ்த்தினார்கள்.



■ திண்டுக்கல் வழியாக காரைக்குடி நகரத்தார் காவடி பழனி நோக்கி சென்றது. இரவு திண்டுக்கல் அபிராமி அம்மன் கோயில் மண்டபம் வந்தடைந்து, பாதை யாத்திரை சென்றது. இக் காவடி பழனியில் தைப்பூசம் விழாவில் சிறப்பு சேர்க்கும். தைப்பூசத்தின் அடுத்த நாள் நகரத்தாருக்கு சிறப்பு பூசை நடக்கின்றது.

## “ஐரோப்பிய சந்தையை ஆக்கிரமியுங்கள்” இந்திய நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு!



டெல்லி, ஜன.30-

உலகத் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து, ஐரோப்பியச் சந்தையை இந்தியத் தயாரிப்புகளால் ஆக்கிரமிக்க வேண்டும் என்று நிறுவனங்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியுள்ள நிலையில், இன்று (ஜனவரி 29) நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையே சமீபத்தில் கையெழுத்தான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தை ‘அனைத்து ஒப்பந்தங்களின் தாய்’ என்று குறிப்பிட்ட பிரதமர், இது இந்தியத் தொழில் துறையினருக்குக் கிடைத்துள்ள ஒரு மிகப்பெரிய மைல்கல் என்று குறிப்பிட்டார். “ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளிலும் இப்போது இந்தியத் தயாரிப்புகளுக்கான கதவுகள் அகலத் திறக்கப்பட்டுள்ளன. இந்திய உற்பத்தியாளர்கள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகத் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து, ஐரோப்பியச் சந்தையை இந்தியத் தயாரிப்புகளால் ஆக்கிரமிக்க வேண்டும்.” என்று அவர் இந்தியத் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை, 140 கோடி இந்தியர்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது என்றும் இந்தியாவின் இளைஞர் சக்தியின் விருப்பங்களை அந்த உரை மிகச் சரியாக வெளிப்படுத்தியுள்ளது என்றும் பிரதமர் மோடி பாராட்டினார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் என்பது ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கான தளம் என்று குறிப்பிட்ட பிரதமர், எதிர்க்கட்சிகள் இதில் இடையூறுகளை உருவாக்குவதை விட்டுவிட்டு, தீர்வுகளைக் காண்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் உரையுடன் நேற்று தொடங்கியது. இது வரும் பிப்ரவரி 13ம் தேதி நடைபெற உள்ளது. வரும் பிப்.1 ஞாயிறு அன்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நடப்பு ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்க செய்ய உள்ளார்.

## தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க மாநில தலைவர் எஸ்.கிருபாகரன் அமைச்சர் ஐ.பெரியசாமியை சந்தித்து வாழ்த்து பெற்றார்



சின்னாளபட்டி, ஜன.30-

சின்னாளபட்டி பாலாஜி மகாலில் நடைபெறும் கட்சியின் துவக்க விழாவில் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தருமாறு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கி சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார் அவருடன் வந்த சுமார் 200 இளைஞர்கள் அமைச்சரிடம் வாழ்த்து பெற்றனர்.

அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் நிறுவனத் தலைவர் கிருபாகரனுக்கு வாழ்த்து தெரிவித்து சிறப்புடன் இயக்கத்தை நடத்த வேண்டும் என வாழ்த்தினார். அவர் பின்னர் வந்திருந்த இளைஞர்கள் அனைவரும் அமைச்சருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கம் மாநில நிறுவன தலைவர் எஸ்.கிருபாகரன் கூறுகையில் ஆத்தூர் தொகுதி பொருத்தவரை தென்பாண்டி சிங்கம் ஐயா ஐ.பி.யார் அவர்கள்தான் நலத்திட்ட உதவிகள் நாயகனாக உள்ளார். எங்கள் கட்சியின் தொடக்க விழாவில் அவரும் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினால் சிறப்பாக ,ருக்கும் என நாங்கள் கேட்டுக் கொண்டோம் அவரும் வருகை தருவதாக ஒத்துக் கொண்டார் என்றார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளாளர் சாணார்பட்டி விஜயன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திர குமார், பேரூராட்சி மன்ற தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் என்ற மணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னாள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் செல்வம் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர், நெல்லை சுபாஷ், திமுக நகர சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## ஏஐ நோக்கி நகரும் பெருநிறுவனங்கள்: 16,000 ஊழியர்களை நீக்கும் அமேசான்!

சென்னை, ஜன.30.-

உலகின் மிகப்பெரிய இகாமர்ஸ் நிறுவனமான அமேசான், தனது கார்ப்பரேட் பிரிவில் பணியாற்றும் 16,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் அந்நிறுவனம் மேற்கொள்ளும் இரண்டாவது பெரிய பணிநீக்கம் இதுவாகும்.




அமேசான் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் பெத் காலெட்டி, இது குறித்து வெளியிட்ட பதிவில், "நிறுவனத்தின் படிநிலைகளைக் குறைக்கவும், அதிகாரத்துவத்தைக் களைந்து உரிமையை அதிகரிக்கவும் இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமேசான் ஏற்கனவே கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 14,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருந்தது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 16,000 இடங்களுடன் சேர்த்து, 2023ம் ஆண்டிற்குப் பிறகு அமேசான் மேற்கொள்ளும் மிகப்பெரிய ஆட்குறைப்பு நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கரோனா பேரிடர் காலத்தில் ஆன்லைன் வர்த்தகம் அதிகரித்தபோது, அமேசான் தனது பணியாளர்களின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தியது. தற்போது நிலைமை சீராகியுள்ளதாலும், ஏஐ தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியாலும், கூடுதல் பணியாளர்களின் தேவை குறைந்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அமேசான் சிஇஓ ஆண்டி ஜாசி, கடந்த ஜூன் மாதமே "வரும் ஆண்டுகளில் ஏஐ தொழில்நுட்பம் கார்ப்பரேட் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்" என்று எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் புதிய வேலை தேடிக்கொள்ள 90 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும், அப்படி கிடைக்காதபட்சத்தில் அவர்களுக்குப் பணிநீக்கக் கால ஊதியம் மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எந்தெந்த நாடுகளில் இந்தப் பணிநீக்கம் அதிகம் இருக்கும் என்பது குறித்த தெளிவான விவரங்களை அமேசான் இன்னும் வெளியிடவில்லை. இந்தியாவில் உள்ள அமேசான் அலுவலகங்களும் இதில் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

இதேபோல், பின்டரெஸ்ட் மற்றும் யுபிஎஸ் போன்ற மற்ற முன்னணி நிறுவனங்களும் ஏஐ தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருவது மென்பொருள் நிறுவன ஊழியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இறங்கி வரும் பெரிய கட்சிகள்... இழுத்தடிக்கும் சிறிய கட்சிகள்!



சென்னை, ஜன.30,-

திமுகவும் அதிமுகவும் கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை இறுதிப்படுத்தி வரும் நிலையில், "இன்னும் 15 நாட்களில் கூட்டணி முடிவை அறிவிப்பேன்" என்கிறார் கிருஷ்ணசாமி. "கூட்டணி முடிவை அறிவிக்க இன்னும் கால அவகாசம் இருக்கிறது" என்கிறார் பிரேமலதா. "தை மாதத்திற்குள் எனது முடிவை அறிவிப்பேன்" என்கிறார் ஓபிஎஸ். விஜய்யுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடப்பதாகச் சொல்கிறது ராமதாஸ் பாமக.

பொதுவாக தேர்தல் காலம் நெருங்கியதுமே அதிமுக, திமுக என இரண்டு பெரியகட்சிகளுக்கும் சிறிய கட்சிகள் கலந்துகட்டி தங்களது ஆதரவை தெரிவிக்கும். திமுகவும் அதிமுகவும் சிறிய கட்சிகளை தேடிப்போய் பேசியதாக வரலாறு இல்லை.

மாறாக, சிறிய கட்சிகள் தான் தங்களுக்கான 'பங்கைப்' பெற அந்தக் கட்சிகளிடம் தவம் கிடக்கும். அதில் சில கட்சிகளுக்கு 'கேட்டது' கிடைக்கும். சில கட்சிகளுக்கு இதயத்தில் மட்டும் இடம் கிடைக்கும்.

ஜெயலலிதா காலத்தில் சிறு கட்சிகளுக்கும் கூட்டணியில் ஒரு இடமாவது கொடுத்து அவர்களை இரட்டை இலை சின்னத்திலேயே போட்டியிட வைக்கும் வழக்கத்தை உருவாக்கினார். இதை திமுகவும் பின்பற்ற ஆரம்பித்தது. ஆனால் இந்தத் தேர்தலில், பெரிய கட்சிகளின் 'பெரியண்ணன்' பாலிடிக்ஸ் மாறிப் போய் சிறு கட்சிகள் பெரிய கட்சிகளுக்கு டிமாண்ட் வைக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

ஒட்டுமொத்த பாமகவும் தன்னிடம் இருப்பதாக அன்புமணி சொன்னாலும் அவர் மட்டும் போதாது ராமதாஸ் அணியும் தங்கள் பக்கம் வரவேண்டும் என அவருடன் இன்னமும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது பாஜக. இன்னொரு பக்கம் திமுகவும், தவெகவும் தைலாபுரத்தை வட்டமிடுவதாகச் சொல்கிறார்கள். சுமார் 2 சதவீத வாக்குகள் மட்டுமே வைத்திருப்பதாகச் சொல்லப்படும் தேமுதிக, இன்னமும் கூட்டணி முடிவை தெரிவிக்காத நிலையில், அந்தக் கட்சிக்கு திமுக, அதிமுக, தவெக என மூன்று கட்சிகளின் தரப்பிலும் 'ஆஃபர்' பேசி வருகிறார்கள்.

தனது ஆதரவாளர்கள் எல்லாம் ஒருவர் பின் ஒருவராக உருவிக் கொண்டு ஓடினாலும் ஓபிஎஸ்ஸுக்கும் இன்னும் கிராக்கி குறைந்துவிடவில்லை. அவருக்கு ஆளுநர் பதவி தருவதாக வெல்லாம் பாஜக ஆசைகாட்டுவதாக சொல்கிறார்கள். திமுக தரப்பில், ஓபிஎஸ் மகனுக்கு ராஜ்ய சபா சீட்டும் மூன்று தொகுதிகளும் தருவதாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் ஒரு பேச்சு ஓடுகிறது. ஆனாலும் இன்னும் முடிவை அறிவிக்காமல் இழுக்கிறார் பெரியவர் ஓபிஎஸ்.

தவெகவின் வருகையும் ஆட்சியில் பங்கு என்ற அந்தக் கட்சியின் அதிரடிபிரகடனமும் இம்முறை சிறிய கட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியத்தை பெரிய கட்சிகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறது. சில நூறு வாக்குகளில் கூட வெற்றி வாய்ப்புகள் தட்டிப் போகலாம் என்பதால் சிறிய கட்சிகளின் வாக்குகளையும் சிந்தாமல் சிதறாமல் தங்கள் பக்கம் கொண்டுவர பெரிய கட்சிகள் பிரயத்தனப்படுகின்றன. இதைப் புரிந்து கொண்டு சிறிய கட்சிகள் நன்றாகவே போக்குக் காட்டுகின்றன.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கில் 59 பேர் விடுதலை: மதுரை நீதிமன்றம் தீர்ப்பு

மதுரை, ஜன.30.-

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கில் 59 பேரை விடுதலை செய்து மதுரை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



தமிழகத்தில் 2017ல் ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதை கண்டித்து சென்னை மெரினா கடற்கரையில் சமூக வலைதளங்கள் மூலமாக இளைஞர்கள் ஒன்றிணைந்து கடந்த 2017 ஜனவரி 8ல் போராட்டம் நடத்தினர். ஜனவரி 15ல் தடையை மீறி அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. இது போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் ஜல்லிக்கட்டு நடத்த வலியுறுத்தி இளைஞர்கள், பொதுமக்கள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

இதனைக் கலைக்க போலீஸார் தடியடி நடத்தினர். மறுநாள் காலை (ஜனவரி 16) இளைஞர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து தடையை நீக்கி ஜல்லிக்கட்டினை நடத்த வேண்டும் என விடிய, விடிய அலங்காநல்லூரில் போராட்டம் நடத்தினர். அலங்காநல்லூர் போராட்டத்திற்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் இளைஞர்கள் மீண்டும் திரண்டு (ஜனவரி 17) போராட்டம் நடத்தினர்.

பீட்டாவைத் தடை செய்ய வேண்டும், ஜல்லிக்கட்டிற்கான தடையை நிரந்தரமாக நீக்க வேண்டும் என போராட்டம் நடத்தினர். முதலில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன் தொடங்கிய இந்த போராட்டம் சமூக வலைதளங்கள் மூலமாக லட்சக்கணக்கான இளைஞர்களுடன் பெரும் போராட்டக்களமாக மாறியது.

இதையடுத்து ஜனவரி 21ல் ஜல்லிக்கட்டுக்கான அவசர சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்தது. அலங்காநல்லூரில் போராடிய 63 பேர் கைது செய்யப்படனர். இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 200க்கும் மேற்பட்டோர் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் 2018ம் ஆண்டு முதல் நடந்து வந்தது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை இன்று நடைபெறது. விசாரணை முடிந்த நிலையில் 59 பேரை விடுதலை செய்து நீதிபதி ஜோசப் ஜாய் தீர்ப்பளித்தார். 4 பேர் மீதான வழக்கு தனியே நடைபெற்று வருகிறது.

## மக்களவையில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் 2027 நிதி ஆண்டின் வளர்ச்சி 7.2% ஆக இருக்கும் என கணிப்பு

புதுடெல்லி, ஜன.30.-

2025-26ம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். 2027 நிதி ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.8% முதல் 7.2% வரை இருக்கும் என்று அதில் கணிக்கப்பட்டுள்ளது.



ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் கூட்டத்தொடரில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக நிதி அமைச்சகம் சார்பில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுவது வழக்கம். நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவு இந்த ஆய்வறிக்கையை தயாரிக்கும். கடந்த ஆண்டில், இந்திய பொருளாதாரம் எவ்வாறு செயல்பட்டது என்பது குறித்த விரிவான பார்வையை இந்த ஆய்வறிக்கை வழங்கும்.

அந்த அடிப்படையில், 202526ம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். இதையடுத்துப் பேசிய சபாநாயகர் ஓம் பிர்லா, பொருளாதார ஆய்வறிக்கையின் நகல், அனைத்து உறுப்பினர்களின் வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பப்படும் என கூறினார்.

பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்: உலகப் பொருளாதார நிலைமைகள் நிச்சயமற்றதாகவும் நிலையற்றதாகவும் உள்ளது. என்ற போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார நிலை தொடர்ந்து நேர்மறையாகவே உள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளால் அபாயங்கள் அதிகமாக இருந்தாலும், பல நாடுகளின் பொருளாதாரங்களோடு ஒப்பிடும்போது இந்தியாவின் வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட சிறப்பாக உள்ளது.

எனவே, 202627 நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 7.4% ஆக இருக்கும் என்றும், 2027 28 நிதி ஆண்டில் இது 6.8% முதல் 7.2% வரை இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் வளர்ச்சி 7.4 ஆக இருக்கும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியம் 7.3% ஆக இருக்கும் என்றும், உலக வங்கி 7.2% ஆக இருக்கும் என்றும் கணித்துள்ளன. இது நிதி அமைச்சகத்தின் முந்தைய கணிப்போடு ஒத்துப்போகிறது.

உள்நாட்டுத் தேவையே இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான உந்துசக்தியாகத் திகழ்கிறது. குறிப்பாக, நகர்ப்புறங்களில் நிலவும் வலுவான நுகர்வோர் தேவை, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வரிச் சீரமைப்பு நடவடிக்கைகள் நகர்ப்பற நுகர்வில் முன்னேற்றத்துக்கு பங்களித்துள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் பாதை வலுவாக உள்ள போதிலும், உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கம் தாமதமாக வெளிப்படக்கூடும் என்பதால், கொள்கை வகுப்பாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மதுரை விமான நிலையம் தரம் உயர்த்தப்படும்" மக்களவையில் அமைச்சர் ராம்மோகன் நாயுடு உறுதி

புதுடெல்லி, ஜன.30.-

உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கு மதுரை விமான நிலையம் மிகவும் முக்கியமான இடம் என்பதால், அதை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விமானப் போக்குவரத்து அமைச்சகம் மேற்கொள்ளும் என்று அத்துறையின் அமைச்சர் கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.



மக்களவையில் கேள்வி நேரத்தின்போது, விருதுநகர் எம்பி மாணிக்கம் தாகூர், மதுரை விமான நிலையம் தொடர்பாக கேள்வி எழுப்பினார்.

அவர் தனது உரையில், ''மதுரையில் இருந்து சென்னைக்கு செல்லும் விமானங்களின் எண்ணிக்கை 8ல் இருந்து 4 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதேபோல், மதுரையில் இருந்து பெங்களூருவுக்கான விமான சேவையும் குறைக்கப்பட்டுள்ளது. மதுரை சென்னை, மதுரை பெங்களூரு இடையேயான விமான சேவையை அதிகரிப்பது தொடர்பாக விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் அவையில் உறுதி அளிக்க வேண்டும்'' என தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, ''தமிழகத்தின் மிக முக்கிய விமான நிலையங்களில் ஒன்று மதுரை. எனவே, இதை கருத்தில் கொண்டு மதுரை விமான நிலையத்தின் மேம்பாட்டுக்காக அரசு குறிப்பாக விமானப் போக்குவரத்துத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மதுரை விமான நிலையம் 24 மணி நேரமும் இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தற்போது விமான சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு விமானங்கள் மட்டுமல்ல, சர்வதேச விமானங்களின் சேவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகள் மீது நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.மதுரை விமான நிலையத்துக்கு சர்வதேச விமான நிலையத்துக்கான அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் தீவிர பரிசீலனையில் உள்ளது.மதுரை சென்னை மற்றும் மதுரை பெங்களூரு விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற உறுப்பினரின் கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்களுடன் நிச்சயம் பேசப்படும். அந்த நிறுவனங்களின் திறனுக்கு உட்பட்டு நிச்சயம் அது அமல்படுத்தப்படும்.

எங்களைப் பொறுத்தவரை மதுரை விமான நிலையம் உள்ளாட்டு விமானப் போக்குவரத்து மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமான இடம். எனவே, அதை மேம்படுத்தும் நோக்கில் நாங்கள் எங்கள் பணிகளை மேற்கொள்வோம்'' என தெரிவித்தார்.

## காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மயக்க ஊசி செலுத்தி பெற்றோரை கொன்ற நர்ஸ் கைது

திருமலை, ஜன.30.-

காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த தாய், தந்தையை மயக்க ஊசி செலுத்தி கொன்று நாடகமாடிய நர்ஸ் கைது செய்யப்பட்டார். தெலங்கானா மாநிலம் விகராபாத் மாவட்டம் யச்சாரம் கிராமத்தை சேர்ந்தவர் தசரத்(60). இவரது மனைவி லட்சுமி(55). இவர்களுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். இரண்டாவது மகள் சுரேகா(26), தனியார் மருத்துவமனை நர்ஸ். இவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டு இருவரும் காதலித்துள்ளனர். ஆனால் காதலுக்கு சுரேகாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மாப்பிள்ளை பார்ப்பதில் தீவிரம் காட்டினர். இதனால் சுரேகா ஆத்திரமடைந்தார்.

இந்நிலையில் கடந்த 24ம்தேதி வீட்டில் தனியாக இருந்த தாயிடம், `உனக்கு அடிக்கடி முதுகுவலி என்கிறாயே? இதனை சரிசெய்ய புதிய மருந்து வந்துள்ளது. இதனை ஊசியில் செலுத்திக்கொண்டால் சரியாகிவிடும்' எனக்கூறி தான் கொண்டு வந்து அதிகளவு மயக்கம் உள்ள மருந்தை ஊசி மூலம் செலுத்தியுள்ளார். சிறிதுநேரத்தில் அவர் மயக்கமடைந்தார். அப்போது வெளியே சென்றிருந்த அவரது தந்தை வீடு திரும்பினார். அவரிடமும், `உனக்கு கால்வலி குணமாக மருந்து வாங்கி வந்துள்ளேன் என்று கூறி அவருக்கும் ஊசி செலுத்தியுள்ளார். அதிக வீரியம் கொண்ட மயக்க மருந்தை அதிகளவு செலுத்தியதால், சில மணி நேரத்தில் பெற்றோர் இருவரும் அடுத்தடுத்து இறந்துள்ளனர்.

அவர்கள் இறந்ததை உறுதிசெய்து கொண்ட சுரேகா, தனது அண்ணனுக்கு போன் செய்து பெற்றோருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டதாக நாடகமாடினார். ஆனால் சந்தேகமடைந்த அவரது அண்ணன், பந்த்வாரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் சம்பவ இடம் வந்து விசாரணை நடத்தினர். அப்போது வீட்டுக்குள் 2 சிரஞ்சுகள் இருந்தது. அவற்றை கைப்பற்றி விசாரணை நடத்தினர். சுரேகாவிடம் நடத்திய விசாரணையில் தனது காதல் திருமணத்திற்கு தடையாக இருந்ததால் பெற்றோரை அதிக மயக்க மருந்து கொண்ட ஊசி செலுத்தியதாக ஒப்புக்கொண்டார். இதையடுத்து போலீசார் சுரேகாவை நேற்று இரவு கைது செய்தனர்

## 4வது பொதிகை புத்தகத் திருவிழா லோகோவினை தென்காசி மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார்

தென்காசி, ஜன.30.-

தென்காசி மாவட்டத்தில் 30.01.2026 முதல் 08.02.2026 வரை தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ள 4 ஆவது பொதிகை புத்தகத் திருவிழாவினை முன்னிட்டு பொதிகை புத்தகத் திருவிழாவின் லோகோவினை (28.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இஆப வெளியிட்டார்.




மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்திய புத்தகப் பதிப்பகம் இணைந்து நடத்தும் மாபெரும் 4 ஆவது பொதிகை புத்தகத் திருவிழாவினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் 30.01.2026 அன்று இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தகக் கண்காட்சியினை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்கள். இப்புத்தகத்திருவிழாவில் அறுபதுக்கும் மேற்பட்ட புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. இப்புத்தக அரங்கில் வரலாறு, புதினம், அரசியல், தலைவர்களின் படைப்புகள், பொழுதுபோக்கு கதைகளான நூல்கள், இலக்கிய தொடர்பான நூல்கள், போன்ற பல்வேறு புத்தகங்கள் இடம் பெற உள்ளன. மேலும், பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், சிந்தனை அரங்கத்தில் சிறந்த கலைஞர்களின் சிறப்புரை நிகழ்ச்சி, பட்டிமன்றங்களும் இடம்பெற உள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர். இ.ஆ.ப. தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட நூலகர் சண்முகசுந்தரம். உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# முடுவார்பட்டி கிராமத்தில் சேவுக ஸ்ரீபெருமாள் கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், ஜன.30.-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே முடுவார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத சேவுகபெருமாள் திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த யாகசாலை பூஜையில் மங்கள இசை முழங்க கோ பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மஹா பூர்ணாகிதி, தீபாராதனை நடைபெற்றது. மூன்று கால யாகபூஜைகளை தொடர்ந்து யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதநீர் கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வானத்தில் கருடன் வட்டமிட கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா நடைபெற்றது. அதனை தொடர்ந்து சுவாமி சிலைகள் மீதும் புனித நீர் ஊற்றப்பட்டு மகா அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் திருக்கோயிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை ஸ்ரீசேவுக பெருமாள் கோவில் பங்காளிகள், இளைஞர்கள், கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



■ ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக 19.12.2025 அன்று வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலுடன், 2002 வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்கள் பொருந்தாத வாக்காளர்களுக்கு அறிவிப்பு வழங்கி, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, அதன் விவரங்கள் சரி செய்யப்பட்டு வருவது தொடர்பாக கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.




■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், திருப்பூர் மாவட்டம் சின்ன முத்தூரில், முத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலை யில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள். உடன் முத்தூட் பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள்.





■ திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி , சீவல்சரகு கிராமத்தில் அமைந்துள்ள ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ_பெரியசாமி அவர்கள் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

# ‘நெல்லை தொகுதியில் மீண்டும் போட்டி’ : நயினார் நாகேந்திரன் சூசகம்



திருநெல்வேலி, ஜன.30.-

"என்னையும் திருநெல்வேலி தொகுதி மக்களையும் பிரித்து பார்க்க முடியாது. 2026ல் திருநெல்வேலி தொகுதி பாஜகவின் பட்டியலில் இடம்பெறும்" என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார். இதன்மூலம் திருநெல்வேலி தொகுதியில் மீண்டும் அவர் போட்டியிடுவதை சூசகமாக குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி தச்சநல்லூரில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் சட்டப்பேரவை தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள புதிய உயர்மின் கோபுரத்தை திறந்து வைத்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “தேசிய ஜனநாயக கூட்டணிக்கு இன்னும் பல கட்சிகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. தேமுதிக தனது நிலைப்பாட்டை வரும் 3ம் தேதி அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தினசரி ஒரு கொலை நடந்து வருகிறது. வட மாநிலத்தவர்களுக்கு எதிராகவும் பெண்களுக்கு எதிராகவும் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தமிழகத்தில் அதிகமான கொலை சம்பவங்கள் நடந்து வருவதற்கு முதல் காரணமே கஞ்சா புழக்கம்தான். ஆனால், அதைப் பற்றி தமிழக முதல்வர் எதையும் பேசாமல் வாக்குக்காக மகளிர் மாநாடு நடத்தி வருகிறார்.

திமுக மகளிர் மாநாட்டில் குக்கர், ஹாட் பாக்சில் பிரியாணி என அனைத்தையும் வைத்து ஆள் பிடித்துக் கொண்டு சென்று கூட்டத்தை நடத்தி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைச்சர்களையும் கசங்கி பிழிந்து, கெடுபிடி வசூல் செய்து உதயநிதி ஸ்டாலினும், கனிமொழியும் கூட்டத்தை நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகி வருகிறது.

மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்த தமிழகம் தற்போதைய முதல்வரால் வாழ தகுதி இல்லாத இடமாக மாறி விட்டது. கஞ்சா விற்பதை தடுப்பதற்கு தமிழக காவல் துறையும் அரசும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? கஞ்சா விற்பவர்களை பாதுகாப்பதற்காக காவல் துறை செயல்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. தமிழகத்தில் கஞ்சா விற்பனை செய்பவர்களையும், போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்களையும் கட்டுப்படுத்த காவல் துறை ஏன் தயங்குகிறது?

காவல் துறையின் ஈரல் கெட்டு விட்டதாக கருணாநிதி சொல்லி வந்தார். ஆனால் இப்போது காவல் துறைக்கு ஈரல் இருப்பதாகவே தெரியவில்லை.

இரட்டை இன்ஜின் சர்க்கார் என்றால், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுவதுதான். அதையே டபுள் இன்ஜின் சர்க்கார் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் தமிழக மக்கள் உள்ளிட்ட பல மாநில மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் மத்திய அரசு திட்டங்களுக்கு முதல்வர் புகைப்படத்தை போட்டு விளம்பரம் தேடி, தாங்கள் செய்வதைப் போல் சொல்லி வருகிறார்கள். தமிழகத்துக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சாலைகள், பாலங்கள், ரயில்வே விமான நிலையங்கள் போன்றவை அமைப்பதற்கும் ரூ.14 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. ஆனால் மத்திய அரசு எதையும் தரவில்லை என்று திமுக கூறி வருகிறது.

ஓபிஎஸ் கூட்டணி நிலைப்பாடு தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறார். நல்லவர்கள் எல்லோரும் எங்களோடு தான் வருவார்கள். ஓபிஎஸ்ஸும் நல்லவர்தான். இதுவரை கூட்டணியில் இணைவதற்கு ஓபிஎஸ்சிடம் எதுவும் பேசவில்லை. தேவைப்பட்டால் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் பாஜக ஆட்சி நடந்து வருகிறது. எங்கும் மோசமான ஆட்சி நடைபெறுவதாக தகவல்கள் இல்லை. திமுக ஆட்சி செய்து தமிழகத்தை மோசமாக்கிவிட்டதாக நான் வெளிப்படையாகவே குற்றம் சாட்டுகிறேன். பாஜக கூட்டணி ஆட்சி தமிழகத்தில் அமைந்தால் மத்திய அரசின் கூடுதல் நிதியை தமிழகத்துக்குப் பெற்றுத் தருவோம். அனைத்து விதமான குற்றங்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

கடந்த 2001, 2006, 2011, 2016 மற்றும் 2021ல் திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்டுள்ளேன். திருநெல்வேலி தொகுதி மக்கள் எனது உடன்பிறந்த சகோதரர்களை போன்றவர்கள். என்னை அவர்களின் வீட்டில் ஒரு பிள்ளையாக பார்க்கிறார்கள். எப்போதும் என்னையும் திருநெல்வேலி தொகுதி மக்களையும் பிரித்து பார்க்க முடியாது. 2026ல் திருநெல்வேலி தொகுதி பாஜகவின் பட்டியலில் இடம்பெறும்.

பாஜக ஆட்சி நடத்தும் மாநிலங்களிலோ, மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளிலோ பாஜகவின் சித்தாந்தத்தால் என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. எதை வைத்து முதல்வர் இப்படி சொல்லிவருகிறார் என்பது புரியவில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில் நல்லவர்கள் இடம்பெறுவார்கள் நாட்டு மக்கள் நல்ல பயனடைவார்கள். 2026ல் தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்” என்று தெரிவித்தார்.

“யார் யாரெல்லாம் நல்லவர்கள் என்பது அடுத்தடுத்து தெரியவரும்” என சசிகலா கூட்டணியில் இணைவாரா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

# திண்டுக்கல் மேயரின் சஸ்பெண்ட் உத்தரவிற்கு தடை



திண்டுக்கல், ஜன.30.-

திண்டுக்கல் மாமன்ற கூட்டத்தில் இரண்டு கூட்டத்திற்கு கலந்து கொள்ளக் கூடாது என 14வது வார்டு பாஜக கவுன்சிலர் தனபாலனை சஸ்பெண்ட் செய்து மேயர் உத்தரவு பிறப்பித்து இருந்தார்

அந்த உத்தரவை எதிர்த்து மதுரை உயர் நீதிமன்ற இரண்டு நீதிபதி அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது...

இரு நீதிபதி அமர்வு மேயரின் சஸ்பெண்ட் உத்தரவிற்கு தடை விதித்து 30:01:2026 வெள்ளிக்கிழமை நாளை காலை நடைபெற உள்ள திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது



# எஸ்.ஐ. தேர்வு முடிவுகள் நிறுத்தி வைப்பு!

சென்னை, ஜன.30.-

கடந்த 27 ஆம் தேதி வெளியிடப்பட்ட காவல்துறை உதவி ஆய்வாளர் தேர்வு முடிவுகள் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மென்பொருள் பிழையால் முடிவுகளில் தவறு ஏற்பட்டுள்ளதால் நிறுத்தி வைப்பு; உதவி ஆய்வாளர் தேர்வு முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று சீருடைப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

# 20 ஆண்டுகால வஞ்சனைக்கு எதிராக கௌரவ விரிவுரையாளர்கள் திரண்டனர்

## எனக்குக் கண்கள் இல்லையென்றால் என்ன? என் சகாக்களின் எதிர்காலம் இருண்டு போவதைக் காண சகிக்காமல் இங்கு வந்துள்ளேன் கண் பார்வையற்ற மூத்த கௌரவ விரிவுரையாளர்




சென்னை | ஜன.30.-

தமிழக உயர் கல்வித் துறையின் முதுகெலும்பாக விளங்கும் கௌரவ விரிவுரையாளர்களின் வாழ்வாதார உரிமைப் போர், நேற்று சென்னையின் இதயப்பகுதியில் எரிமலையாய் வெடித்தது. JACGLA (கௌரவ விரிவுரையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு) ஒருங்கிணைப்பில் மாநிலம் முழுவதிலுமிருந்து திரண்ட ஆயிரக்கணக்கான விரிவுரையாளர்கள், தங்கள் 20 ஆண்டு கால இருண்ட வாழ்விற்கு நீதி கேட்டுச் சென்னை வீதிகளை முழக்கங்களால் அதிரச் செய்தனர்.

*தேர்தல் வாக்குறுதி என்ன ஆனது? ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரமேஷ் கேள்வி*

போராட்டக் களத்தில் ஊடகங்களைச் சந்தித்த யிகிசிநிலிகி ஒருங்கிணைப்பாளர் டாக்டர். ரமேஷ் பேசுகையில், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கௌரவ விரிவுரையாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என முதல்வர் தனது தேர்தல் அறிக்கையில் (Manifesto) உறுதியளித்திருந்தார். இன்று அந்த வாக்குறுதி என்ன ஆனது? எங்களை வீதிக்கு இழுத்ததுதான் விடியல் அரசா?" என ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

*20 ஆண்டுகால ரத்த சாட்சி டாக்டர் சென்னி கிருஷ்ணன்*

மற்றொரு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சென்னி கிருஷ்ணன் போராட்டத்தின் வரலாற்றைத் தொகுத்துப் பேசுகையில், "இது ஒருநாள் போராட்டமல்ல, இருபது ஆண்டு கால கண்ணீரின் வெளிப்பாடு. பலமுறை ஏமாற்றப்பட்ட எங்களின் இறுதி யுத்தம் இது. வெற்றி கிடைக்கும் வரை பின் வாங்கப் போவதில்லை" என வரலாற்றுச் சான்றுகளுடன் உரையாற்றினார்.

*தகுதியிருந்தும் தவிக்கும் அவலம் பெண் விரிவுரையாளர்களின் குமுறல்*

போராட்டத்தில் பங்கேற்ற பெண் கௌரவ விரிவுரையாளர்கள், தங்களுக்கு மகப்பேறு விடுப்பு (Maternity Leave) கூட மறுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி அழுதனர். "UGC நிர்ணயித்த NET/SET/Ph.D தகுதிகளுடன் பணியாற்றும் எங்களுக்கு, சம வேலைக்குச் சம ஊதியம் (Equal Pay for Equal Work) வழங்கப்பட வேண்டும். ₹57,700 என்பது எங்கள் பிச்சை அல்ல, அது எங்களின் அடிப்படை உரிமை" என அவர்கள் தன்னம்பிக்கையுடன் முழக்கமிட்டனர்.

*ஊனத்தை வென்ற உரிமைப் போர் நெகிழவைத்த காட்சி*

போராட்டத்தின் சிகரமாக, கண் பார்வையற்ற மூத்த கௌரவ விரிவுரையாளர் ஒருவர் களத்தில் தோன்றி ஆற்றிய உரை கல் நெஞ்சையும் கரைய வைத்தது. "எனக்குக் கண்கள் இல்லையென்றால் என்ன? என் சக விரிவுரையாளர்களின் எதிர்காலம் இருண்டு போவதைக் காண சகிக்காமல் இங்கு வந்துள்ளேன். உடல் தடையல்ல, உரிமையே முக்கியம்" என அவர் பேசியபோது ஒட்டுமொத்தக் கூட்டமும் உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தது.

*அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை:*

உடனடியாக UGC பரிந்துரைப்படி ₹57,700 ஊதியம் வழங்க வேண்டும். 12 மாத கால ஊதியத்தை உறுதி செய்ய வேண்டும்.

"எங்கள் கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில், இந்தப் போராட்டம் அடுத்தக்கட்டமாகத் தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் தீவிரப் போராட்டமாக மாறும்" என JACGLA தலைமை எச்சரித்துள்ளது.

# தென்காசி தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சியர் துவக்கி வைப்பு

தென்காசி, ஜன.30.-

மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தேசிய நெடுஞ் சாலைத்துறை சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் தென்காசி நெடுஞ் சாலைத்துறை மூலம் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தென்காசி இ.சி.ஈ.அரசு




அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வீட்டுவசதி வாரிய குடியிருப்பு வழியாக மீண்டும் புதிய பேருந்து நிலையம் வந்தடைந்தது. இபபேரணியில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தென்காசி நெடுஞ் சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு அலகின் கோட்டப் பொறியாளர் கா.தங்கராஜ், உதவிக் கோட்டப் பொறியாளர் திருவருள்செல்வன், உதவிப் பொறியாளர்கள் இராமகிருஷ்ணன், பாலகணேஷ் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினைச் சார்ந்த பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி அனந்தபுரம் ஆபத்தான பள்ளம் : தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு சீரமைக்க கோரிக்கை

தென்காசி, ஜன.30.-

, தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தென்காசி மாவட்ட நெடுஞ் சாலைத் துறை கோட்ட கண் காணிப்பாளர் டைட்டஸ் அவர்களிடம் அனந்தபுரம் ரயில்வே கேட் இருபுறங் களிலும் ரோடானது உள்வாங்கி பள்ளம் ஏற்றப்பட்ட காரணத்தினால் உடனடியாக அதனை சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத் துள்ளார். தற்போது ரோட்டுக்கு மத்தியில் மணல் மூட்டை களையும்



தடுப்புகளையும் கடந்த மூன்று மாத காலமாக வைத்திருக் கிறார்கள். ரோடானது முற்றிலுமாக உள்வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக பள்ளம் ஏற்பட்டு வருகிறது. ரயிவே கேட்டுக்கு கீழ்புறம் முற்றிலுமாக ரோடு இறங்கிவிட்டது.

பள்ளி வாகனங்கள் பேருந்துகள் மற்ற வாகனங்களில் செல்லும் மக்களுக்கு பெரும் விபத்து ஏற்படுவதற்கு முன்னால் இந்த ரோட்டை சரி செய்ய வேண்டும் இன்னும் பத்து நாட்களுக்குள் இதற்கான பணியை தொடங்க விட்டால். மிகப்பெரிய விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. பெரும் விபத்துக்கள் ஏற்பட்டால், நெடுஞ் சாலை துறையே முழு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# அமைச்சர் ஐ.பெரியசாமி திமுகவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி இல்லத்திற்கு நேரில் சென்று மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்

சின்னாளபட்டி, ஜன .30.-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1989 முதல் இன்று வரை முடிசூடா மன்னராக வலம் வருபவர் தொகுதி மக்களால் தென்பாண்டி சிங்கம் என அன்போடு அழைக்கப்படும் அமைச்சர் ஐ.பெரி;யசாமி அவர்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் அனைத்து இல்ல விழாக்களுக்கும் நேரில் சென்று அன்பளிப்பு மற்றும் நிதி உதவி வழங்குவதை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார். இதுபோல வெளியூர் சென்றிருந்தால் திண்டுக்கல் வந்தவுடன் அவர்களின் இல்லத்திற்கு சென்று வாழ்த்துவது வாடிக்கையாக கொண்டுள்ளார். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய பிள்ளையார்நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதிநிதி மறைந்த அழகர் அவர்களின் மகன் ஏ.ராஜா கிளைச் செயலாளர் பதவியில் இருந்துள்ளார்.



இவரது மகன்களில்; அரவிந்த் வாக்குசாவடி முகவராகவும், இளையமகன் ஆனந்த் இளைஞரணியிலும் பொறுப்பில் உள்ளார். மாற்றுத் திறனாளியான ராஜா தனது இல்ல விழாவிற்கு வருகை தருமாறு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை கேட்டுக் கொண்டார்.

விஷேச நாள் அன்று அமைச்சர் சென்னை சென்றுவிட்டதால் வந்தவுடன் மாற்றுத்திறனாளியான திமுக தொண்டர் ராஜா மற்றும் அவரது குடும்பத்தாரை மகிழ்விக்கும் வண்ணம் அவர்களின் இல்லத்திற்கே நேரில் வந்து வாழ்த்தியதோடு அவர்களின் கட்சிப் பணிகள் குறித்து பெருமிதமாக நிர்வாகிகளின் மத்தியில் எடுத்துரைத்தார். ராஜா ஆத்தூர் தொகுதியில் திமுக சார்பாக நடைபெறும் ஆர்ப்பாட்டம் மற்றும் கட்சிக் கூட்டத்திற்கு வந்தாலும், மூன்று சக்கர வாகனத்தில் சிரமம் பார்க்காமல் கலந்து கொள்வார். பாரம்பரியமாக திமுகவைச் சேர்ந்த ராஜா குடும்பத்தாரை மகிழ்விக்கும் வண்ணம் நானே நேரில் வந்து வாழ்த்தினேன் என்றார்.



■ மதுரை மாவட்டம் 192 மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முனிச்சாலை அந்தோணியார் கோவில் தெருவில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், இடமாற்றம் தொடர்பாக பெறப்பட்ட படிவங்கள் குறித்தும், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் அருண்தம்புராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் முன்னிலையில் சரிபார்ப்புப் பணியினை மேற்கொண்டார்.



■ திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வஉசிமைதானத்தில் இன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் சுகுமார் திருக்கரத்தாள் திருநெல்வேலி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் சிறந்த சேவையை செய்தமைக்கு செயற்பொறியாளர் (ஊ.வ)செல்வராஜ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு சிறப்பான பணியைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் கேடய வழங்கி சிறப்பித்து வழங்கப்பட்டது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரசன்னகுமார் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

# சத்திரவெள்ளாளபட்டி கிராமத்தில் ஜல்லிக்கட்டு அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார்

பாலமேடு.ஜன.30.-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகேசத்திரவெள்ளாளப்பட்டி கிராமத்தில் சின்னம்மன்கோயில் திருவிழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி நடந்தது. அமைச்சர் மூர்த்தி, எம்.எல்.ஏ., வெங்கடேசன், ஆர்.டி.ஓ., கருணாகரன், தாசில்தார் ராமச்சந் திரன், துவக்கி வைத்தனர். காளைகள், வீரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு பின் அனுமதிக்கப்பட்டனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து 840 காளைகள், 349 வீரர்கள் பங்கேற்றனர். காயமடைந்த 17ல் 4 பேர் மதுரை அரசுமருத்



துவமனைக்கு அனுப்பப்பட்டனர். 19 காளைகளை பிடித்த பொந்துகம்பட்டி அஜித்துக்கு புல்லட், 17 காளைகள் பிடித்த சோழவந்தான்

பிரகாஸ்க்கு டூவீலர், 15 காளைகள் பிடித்த கழுங்குபட்டி விக்னேஷ் டூவீலர் பரிசு வழங்கப்பட்டது. அதேபோல் தவசிமடை கல்யாணி காளைக்கு புல்லட், சின்ன ஊர்சேரி ஆர். எஸ்.பி., பார்த்தசாரதி காளைக்கு டூவீலர், அவனியாபுரம் ஏ.கே., கண்ணன் காளைக்கு கன்றுடன் கூடிய நாட்டு பசு பரிசாக வழங்கப்பட்டது. ஜல்லிக்கட்டுக்கான விழா ஏற்பாடுகளை சத்திரவெள்ளாளப்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்..

# 41 குடும்பங்களை அனாதையாக்கி விட்டார் : விஜய் மீது கடும் விமர்சனத்தை முன்வைத்த எடப்பாடி பழனிசாமி!!

சேலம், ஜன.30.-

அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வத்தை மீண்டும் சேர்க்க வாய்ப்பே இல்லை என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அதிமுகவில் இணைக்க டிடிவி எடப்பாடியிடம் பரிந்துரைக்க வேண்டும் என்றும் ஒன்றிணைப்புக்கு நான் தயார், எடப்பாடி தயாரா என்றும் ஓ.பன்னீர்செல்வம் பேசியிருந்தார். இந்த நிலையில் சேலத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "கூட்டணி விவகாரத்தில் அதிமுக மிக தெளிவாக செயல்பட்டு வருகிறது. இன்னும் சில கட்சிகளுடன் பேசி வருகிறோம்; அது இறுதியான பின் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம். அதிமுக பொதுக்குழுவில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டு, ஓபிஎஸ் அதிமுகவின் அடிப்படை உறுப்பினராக இருந்து நீக்கப்பட்டுவிட்டார். நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

அதனால் அதிமுகவில் அவரை



சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. முறையாக திட்டமிடாததால்தான் கரூரில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். நடிகர் என்றால் கூட்டம் வரத்தான் செய்யும். 41 உயிர்கள் பறிபோய் இருக்கிறது. அவரைப் பார்க்க வந்ததால் தான் இறந்தார்கள். விஜய் சிறந்த நடிகர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் சிறந்த அரசியல் கட்சி நாங்கள்தான். நாங்கள்தான் இதுவரை மக்களுக்கு சேவை செய்கிறோம், குரல் கொடுக்கிறோம். எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்ததாக விஜய் சொல்கிறார்?. யாருக்காக அதை விட்டுவிட்டு வந்தார்?. கட்சி வேறுபாடுகள் பார்க்காமல் நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறினோம்.

அரசியல் பகுப்பாய்வு

அரசாங்கம் நடத்த அனுபவம் இருக்க வேண்டும். எனக்கு அரசியலில் 51 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. அரசியல் என்று வந்துவிட்டால் மக்களை நேரில் சென்று சந்திக்க வேண்டும். கரூர் துயர சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்காத விஜய் ஒரு தலைவரா?. அவர்களுக்கு ஆறுதல்கூட தெரிவிக்க முடியவில்லை, கட்சி நடத்தி என்ன செய்வது?. கரூர் நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களை விஜய் அனாதையாக்கிவிட்டார்." இவ்வாறு தெரிவித்தார்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 06.07.1936



மறைவு 28.01.2026

திரு.ஜேம்ஸ்கென்னடி TNEB , ராஜப்பா, பாபு, பிரபு அவர்களின் தகப்பனார்

**சி.லூர்துசாமி** அவர்கள்

28.01.2026 அன்று மாலை 4.30 மணியளவில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்

இப்படிக்கு

சக்கர வியூகம் நாளிதழ்

CPIM - அம்மாபாளையம் அவிநாசி










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000